**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாள் சனிக்கிழமை

**IA.No.7/2025 in OS.No.66/2015**

**TNTM 03000283/2015**

1. ஆர். கண்ணன்(இறந்தார்)
2. கே.பச்சையம்மாள்
3. கே.பட்டு
4. கே.வேலு
5. கே.உண்ணாமலை
6. கே.வசந்தா
7. பி.வேண்டா ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

ஆர்.சிவகாமி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 23.10.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மார்கபந்து,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.ரமேஷ்,B.A.,B.L., திரு.B.பாண்டியன்,B.A.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக ஏற்க உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1A மற்றும் 151 சி.பி.சி–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 4ம் பிரதிவாதி தாக்கல் செய்யும் மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் இம்மனுவில் 4ம் மனுதாரர்/4ம் பிரதிவாதி ஆவார். 2, 3 மற்றும் 5 முதல் 7 மனுதாரர்கள் 4ம் மனுதாரரின் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள். எனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காவும் இந்த பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறார். மேற்சொன்ன அசல் வழக்கினை எதிர்மனுதாரர் மனுதாரரின் தகப்பனாரான முதல் மனுதாரருக்கு எதிராக அடமானக் கடன் தொகை வசூலிப்பதற்காக தாக்கல் செய்தார். மேற்சொன்ன வழக்கில் பிரதிவாதிகளான எங்கள் தரப்பு சாட்சிகளை விசாரணை

செய்வதற்காக இன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழக்கு சம்பந்தமாக 1.நான் வாதிக்கு 03.05.2003ல் ஏற்படுத்திக்கொடுத்த உடன்படிக்கை, 2.மேற்சொன்ன உடன்படிக்கை ஆவணத்தில் 09.06.2003ல் ரூ.50,000/– செலுத்தி ஏற்படுத்திய செல்லு எண்டார்ஸ்மெண்ட் மற்றும் 3. 07.08.2003ல் வாதிக்கும், பிரதிவாதிகளாகிய எங்களுக்கும் இடையே வட்டி தொடர்பாக ஏற்பட்ட ஒப்பந்தம் ஆகிய ஆவணங்கள் தற்போது எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்சொன்ன ஆவணங்கள் வழக்கிற்கு மிக முக்கிய ஆவணங்களாகும். எனவே மேற்சொன்ன ஆவணங்களை என் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டியது அவசியமாகிறது. மேற்சொன்ன ஆவணங்களை என் தரப்பில் கூடுதல் ஆவண சாட்சியங்களாக ஏற்பதால், எதிர்தரப்பினருக்கு எவ்விதமான பிரச்சனையும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே மேற்படி வழக்கில் நான் தற்போது தாக்கல் செய்யும் மனு ஷெட்யூலில் கண்டுள்ள ஆவணங்களை என் தரப்பில் கூடுதல் ஆவண சாட்சியங்களாக ஏற்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **எதிருரை சுருக்கம்:–**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மன ஷெட்யூலில் காட்டப்பட்டுள்ள ஆவணங்களை வழக்கில் கூடுதல் ஆவண சாட்சியங்களாக ஏற்றுகொள்ள கோரும் மேற்படி ஆர்டர் 8 ரூல் 1(எ) சி.பி.சி. மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த மனுவில் மனுதாரர்கள் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மைக்கு மாறானவை. அவை அனைத்தையும் இந்த எதிர்மனுதாரர்/வாதி வன்மையாக மறுக்கிறார். அவற்றை மனுதாரர்களே சட்டப்படி நிரூபிக்க கடமைபட்டவர்கள். மனு ஷெட்யூலில் காட்டப்பட்டுள்ள ஆவணங்களுக்கும் எதிர்மனுதாரர்/வாதிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வாதியின் தாவா அடமான கடனை, வட்டியுடன் ஏமாற்றவே மனுதாரர்களால் சட்டத்திற்கு புறம்பாக போர்ஜரியாக தயார் செய்யப்பட்டு இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.மேலும் மேற்கண்ட ஆவணங்கள் உண்மையான ஆவணங்களாக இருந்திருந்தால் வழக்கில் பதிலுரை தாக்கல் செய்யும்போதே மனுதாரர்கள் தாக்கல் செய்திருப்பார்கள். மேலும் மேற்சொன்ன ஆவணங்களை காண்பித்து பிரதிவாதிகள் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்தபோது மேற்படி ஆவணங்கள் பொய்யான ஆவணங்கள் என்பதை வாதி கனம் நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரிவித்துள்ளார். வழக்கினை மேற்கொண்டு கால தாமதம் செய்யவும், தாவா அடமான கடனை வட்டியுடன் ஏமாற்றவும் பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனுவினை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கடந்த பத்து ஆண்டுகளாக மேற்படி வழக்கை நடத்த விடாமல் காலம் கடத்தி வந்துள்ளார்கள். மேற்கொண்டு கால தாமதம் செய்யவும், தாவா அடமான கடனை வட்டியுடன் ஏமாற்றவும்

பொய்யான சங்கதிகளை கூறி மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவில் எந்தவித உண்மையான நேர்மையான காரணங்களும் இல்லை. எனவே இம்மனுவினை எதிர்மனதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

5. மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது அடமான கடன் தொகை வசூலிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக நான் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தம் அந்த கிரைய ஒப்பந்தத்தில் 09.06.2003ல் ரூ.50,000/-ம் கொடுத்ததற்கான செல்லு மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது. வாதிக்கும், எங்களுக்கும் ஏற்பட்ட வட்டி சம்மந்தமான ஒப்பந்தம் ஆகிய ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது. எங்கள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மேற்படி ஆவணங்களை எங்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக ஏற்க அனுமதிக்கவேண்டும் என்று விவரம் கூறி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களுக்கும், வாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை. வாதியின் அடமான கடனை வட்டியுடன் ஏமாற்றுவதற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் உண்மையான ஆவணங்களாக இருந்திருந்தால், எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்திருப்பார்கள். வாதி தனது குறுக்கு விசாரணையின் போது மேற்படி ஆவணங்களை ஏற்கவில்லை. அவற்றை பொய்யான ஆவணங்கள் என்று கூறியிருக்கிறார். வழக்கை காலம் கடத்தவேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

8.அசல் வழக்கானது வாதியால் இறந்துபோன 1ம் வாதி கண்ணன் மீது அடமான கடன் வசூல் செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன 1ம் பிரதிவாதி கண்ணன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், 2வது பத்தியில் 07.08.2003ம் தேதி ஒரு ஒப்பந்த முச்சிலிக்கா ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். மற்ற இரண்டு ஆவணங்கள் குறித்து எதிர் வழக்குரையில் விவரம் எதுவும் இல்லை. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் வழக்கினை தீர்வு காண்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. இருப்பினும் இம்மனுவில்

குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் 2003ம் ஆண்டு ஆவணங்களாகும். அசல் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும்போது இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என்பது தெரியவருகிறது. எனவே இந்த மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்மனுதாரருக்கு ரூ.500/-த்தை வருகின்ற 10.11.2025 தேதிக்குள் செலுத்தவேண்டும் தவறினால் மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும், அழைக்க வாய்தா 11.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.11.01 17:36:35 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u> இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.11.01 17:36:44 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.